FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

C 8348082

1. District : Krishnagiri PS: VAPE Year: 2026 FIR No.: 05/mc/2026 Date: 07.07.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The PC Act, 1988, as amended Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: In 2018 Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 07.07.2026 Date to : before 05.30 hrs.
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 07.07.2026 Time : 19.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Computer Typed
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 55 KM West
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : Transport Department Checkpost (Inward)
முறைக் காவல் எண் முகவரி Zuzuvadi, HOSUR.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. R. Mohandass (b) Father's/ Husband's Name : S. Ramadass
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : Age-54 (d) Nationality : Indian (e) Passport No. : -
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : - Place of Issue : -
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Special Tahsildar (SSS) (g) Address : Taluk Office, Pochampalli, Krishnagiri District.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tr. D. Prabhakaran, Motor Vehicle Inspector (N.T), Transport Department Check post (Inward), Zuzuvadi, Hosur.
2) Tr. A.S. Rajesh, Office Assistant, Transport Department check post (Inward), Zuzuvadi, Hosur.
3) Tr. K.E. Amaithi Kanthan, Assistant, Transport Department Check post (Inward) Zuzuvadi, Hosur.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

-

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10 Total value of properties stolen / involved : -
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. If any: -
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted :

Separate Sheet enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

7/7/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

07.07.26

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

07.07.2026 at 20.10.hrs.

Name: பெயர் A.T. Jai Kumar,
Rank: நிலை .....No. எண் .....
Deputy Superintendent of Police
VAC, Krishnagiri.

கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 5/AC/2026 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வ.எண். 12-ன் தொடர்ச்சி.

இன்று 07.07.2026-ம் தேதி 19.00 மணிக்கு காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்தபோது, திரு.R.மோகன்தாஸ், சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக புகாரின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர்: திரு.R.மோகன்தாஸ், சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம். பெறுநர்: காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கிருஷ்ணகிரி. ஐயா, நான் கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டாட்சியர் அலுவலகத்தில் சமூக பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சிதலைவர் அவர்களின் செயல்முறை ஆணை Roc.No. 1096/2026/A1, நாள் 06.07.2026-ன்படி சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராக என்னை நியமித்திருந்தார். எனக்கு கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் ஜுஜுவாடி போக்குவரத்து உள்வருகை சோதனைச்சாவடியில் பணிபுரியும் அலுவலர்கள் நேரடியாகவும் மற்றும் தனி நபர்கள் மூலமாகவும் வெளி மாநிலத்தில் இருந்து தமிழ் நாட்டிற்குள் நுழையும் வாகன ஓட்டுநர்களிடமிருந்து கையூட்டாக பணம் பெற்றுக் கொண்டு தற்காலிக அனுமதி சீட்டு வழங்குவதாகவும், நடை சீட்டுகளில் முத்திரை பதிப்பதாகவும், விதிமீறல்கள் ஏதேனும் இருப்பின் அதன்பேரில் இணக்க கட்டணம் விதிக்காமல் அனுப்பி விடுவதாகவும் கிடைத்த இரகசிய தகவலின் பேரில் கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் காவல் குழுவினருடன் ஓசூர் ஜுஜுவாடி போக்குவரத்து உள்வருகை சோதனைச்சாவடிக்கு வந்து, காலை 05.30 மணிக்கு திடீர் ஆய்வு மேற்கொண்டேன். நானும், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.D.பிரபாகரன் அவர்களிடம் அறிமுகம் செய்துகொண்டு, சோதனைச்சாவடியில் திடீர் ஆய்வுசெய்ய வந்திருக்கும் விவரம் தெரிவிக்கப்பட்டது. மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.D.பிரபாகரன் 06.07.2026-ம் தேதி காலை 08.00 மணி முதல் மாலை 08.00 மணி வரை சோதனைச்சாவடியில் அலுவலில் இருந்ததாகவும், இரவு பணிக்கு

வரவேண்டிய மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.T.அதியமான், உடல்நிலை சரியில்லாமல், தற்செயல் விடுப்பில் இருந்ததால், இரவு 08.00 மணி முதல் 07.07.2026-ம் தேதி காலை 08.00 மணி வரையுள்ள இரவு பணியை தான் தொடர்ந்து செய்துவருவதாகவும், தன்னுடன் உதவியாளர் திரு.K.E.அமைதி காந்தன் மற்றும் அலுவலக உதவியாளர் திரு.A.S.ராஜேஷ் ஆகியோர்கள் பணியில் உள்ளதாக தெரிவித்தார். பின்னர், உதவியாளர் திரு.K.E.அமைதி காந்தன் அவர்களிடம் அரசு கணக்கில் வசூலான தொகை குறித்து கேட்டதற்கு, இரவு 08.00 மணி முதல் காலை 05.50 மணி வரை பல்வேறு இனங்களில் வசூலான தொகை குறித்த வசூல் அட்டவணையை கணினியிலிருந்து அச்சுப் பிரதி எடுத்து ஆஜர் செய்து, 06.07.2026-ம் தேதி இரவு 08.00 மணி முதல் 07.07.2026-ம் தேதி காலை 05.50 மணி வரையில் அரசு கணக்கில் வரி ரூ.2,46,263/-, கட்டணம் ரூ.600/-, இணக்கக் கட்டணம் ரூ.6,000/-, சேவைக் கட்டணம் ரூ.3,100/-, 1% வரி ரூ.2,483/- என ஆகமொத்தம் ரூ.2,58,446/- வசூல் செய்துள்ளதாக தெரிவித்து, அவர் அருகில் வைத்திருந்த பச்சைநிற பிளாஸ்டிக் பாக்ஸில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். நான் அதை எண்ணிப்பார்க்கையில் பணம் ரூ.2,58,446/- சரியாக இருந்தது. பின்னர் நான் அரசு கணக்கில் வேறு ஏதாவது பணம் உள்ளதா என்று மோட்டார் வாகன ஆய்வாளரிடம் கேட்டதற்கு, 06.07.2026-ம் தேதி காலை 08.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை பணியில் இருந்த உதவியாளர் திரு.S.செல்வகுமார் ரூ.4,83,487/- வசூல் செய்துள்ளதாக தெரிவித்து, பண பதிவேட்டினை எடுத்து ஆஜர் செய்தார். அப்பதிவேட்டில், வரி ரூ.4,70,656/-, கட்டணம் ரூ.1,860/-, சேவைக் கட்டணம் ரூ.6,210/-, மற்றும் 1% வரி ரூ.4,761/- என மொத்தம் ரூ.4,83,487/- வசூல் செய்யப்பட்ட விவரம் பதிவுசெய்யப்பட்டிருந்தது. பின்னர், மோட்டார் வாகன ஆய்வாளர் எடுத்து ஆஜர் செய்த பணத்தை எண்ணிப்பார்க்கையில் பணம் ரூ.4,83,487/- சரியாக இருந்தது. பின்னர், திடீர் ஆய்வின் போது, மோட்டார் வாகன ஆய்வாளரின் இருக்கைக்கு முன் இருந்த டேபிளின் எதிர்புறம் இருந்த அட்டை பெட்டியினுள் இருந்த ரூ.56,000/- (500X110 + 100X10): மோட்டார் வாகன ஆய்வாளர் அறையின் தெற்கு பகுதியில், கிழக்கில் இருந்து மேற்காக தரையிலிருந்து சுமார் 2 அடி உயரத்தில் அமைக்கப்பட்டிருந்த பிளைவுட்டினாலான 20 சிறு டிராயர்களில் முதலாவது டிராயரில் இருந்த இரண்டு காக்கிநிற அலுவலக கவர்களில்

இருந்த தலா ரூ.50,000/- (500X100 + 500X100) என மொத்தம் ரூ.1,00,000/-; மோட்டார் வாகன ஆய்வாளரின் ஒய்வு அறையில் தெற்குபகுதியில் இருந்த கணினி மேசையின் மீதிருந்த பழைய "hp" பிரிண்டருக்கு உள்ளே ஒரு மஞ்சள் நிற துணிப்பையில் இருந்த மூன்று காக்கிநிற அலுவலக கவர்களில் இருந்த தலா ரூ.50,000/- (500X100 + 500X100 + 500X100) என மொத்தம் ரூ.1,50,000/-; மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளரின் அறைக்கு கிழக்குபக்கம் இருந்த சமையல் அறை மற்றும் பழைய பதிவேடுகள் பராமரிக்கும் அறையில் இருந்த அலுவலக உதவியாளர் திரு.A.S.ராஜேஷின் "KEEBEE" என்று அச்சிடப்பட்ட சம்பல்நிற shoulder bag-ல் இருந்த பணம் ரூ.34,000/- (500X68) என மொத்தம் ரூ.3,40,000/- கணக்கில் வராத பணம் இருந்தது. மேற்படி கணக்கில்வராத பணம் வாகன ஓட்டுநர்களுக்கு நடைச்சீட்டில் சீல் போட்டுக் கொடுத்ததற்காகவும், விதி மீறல்கள் மீது இணக்கக் கட்டணம் வசூல் செய்யாமலிருக்கவும், தற்காலிக அனுமதி சீட்டு வழங்கியதற்காகவும் சோதனைச்சாவடியில் பணிபுரியும் அலுவலர்கள் கையூட்டாக பெற்ற பணம் என்பதால், திடீர் ஆய்வின்போது தயார்செய்த செயல்முறை நடவடிக்கையில் மேற்படி பணம் ரூ.3,40,000/- கைப்பற்றப்பட்டது. திடீர் ஆய்வின்போது, ஒசூர் ஜுஜுவாடி போக்குவரத்து உள்வருகை சோதனைச்சாவடியில் பணிபுரியும் அலுவலர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.3,40,000/-, கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.D.பிரபாகரன் மற்றும் அலுவலக உதவியாளர் திரு.A.S.ராஜேஷ், திரு.V.ரகுபதி, திரு.C.K.நவீன் குமார், மற்றும் திரு.P.சூர்யா ஆகியோரின் வாக்குமூலங்கள் திடீர் ஆய்வின்போது தயார்செய்த செயல்முறை நடவடிக்கையுடன் ஆஜர்படுத்துகிறேன். ஒசூர் ஜுஜுவாடி போக்குவரத்து உள்வருகை சோதனைச்சாவடியில் பணிபுரியும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.D.பிரபாகரன், உதவியாளர் திரு.K.E.அமைதி காந்தன் மற்றும் அலுவலக உதவியாளர் திரு.A.S.ராஜேஷ் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, ஒப்பம் திரு.R.மோகன்தாஸ்.

மேற்கண்ட புகாரின்படி, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, மேற்கு சரக, காவல் கண்காணிப்பாளர், அவர்களின் உத்தரவுபடி கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 5/AC/2026 u/s 7(a) of the

Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி இன்று 07.07.2026-ம் தேதி 20.00 மணிக்கு வழக்கு பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் ஆகியவற்றை மாண்பமிகு மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி, கிருஷ்ணகிரி அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன்.